# மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
# கண்டி
# அலகுப் பரீட்சை - 07

பாடம் : இந்து நாகரீகம் நேரம் - 1.30 நிமிடம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1-20 வரையுள்ள வினாக்களில் மிகப்பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

1 கோயிற் கட்டடக்கலையில் தேர்ச்சி பெற்றவன்

1.ஸ்தபதி 2. விஸ்வபதி 3. பிரஜாபதி 4. பசுபதி 5. ஸ்தூபி

2. பல்லவர்கால கட்டடக்கலையின் படிமுறைகளை காட்டும் தொகுதி

1. குடைவரை,கற்றளி,மலைத்தளி 2. குடைதளி,மலைத்தளி,கற்றளி

3. மலைத்தளி,கற்றளி,குடைவரை 4. குடைவரை,கற்றளி,மலைத்தளி 5.கற்றளி,மலைத்தளி,குடைவரை

3. விசித்திர சித்தன் என அழைக்கப்படும் பல்லவ மன்னன்

1. நந்திவர்மன் 2. இராஜசிம்மன் 3. மாமல்லன் 4. மகேந்திரவர்மன் 5. இராஜேந்திரன்

4. பல்லவர்காலத்து “சிற்பக் கலைக்களஞ்சியம்” என்று போற்றப்படும் ஆலயம்

1. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் 2. காஞ்சி கைலாச நாதர் கோயில் 3.தர்மராச ரதக் கோயில்

4. காஞ்சி வைகுந்த பொருமாள் கோயில் 5. காஞ்சிபுரம் இறவாதான் ஈஸ்வரம்

5. வாஸ்து சாஸ்திரம் விளக்கும் கலை

1. கட்டடம் 2. சிற்பம் 3. நடனம் 4. இசை 5. ஓவியம்

6. ‘அவனிபஜான்’ பல்லவேஸ்வரம் என அழைக்கப்பட்ட ஆலயம் எது

1. காஞ்சி கைலாச நாதர் கோயில் 2. முத்திஸ்வரம் 3. வைகுந்த பெருமாள் கோயில்

4. தர்மராஜ ரதம் 5. பிடாரி ரதம்

7. காஞ்சி கைலாச நாதர் கோயிலை கட்டுவித்த மன்னன்

1. இராஜசிம்மன் 2. மாமல்லன் 3. தேவரோடன் 4. நரசிம்மன் 5. நந்தி வர்மன்

8. ஆனந்த திருதாண்டவம் பற்றி குறிப்பிடப்படும் புராணம்

1.கூர்ம புராணம் 2. கந்த புராணம் 3. சிவபுராணம் 4. விஷ்னு புராணம் 5. பெரிய புராணம்

9. சங்ககால புறநானூற்றுப்பாடலில் குறிப்பிடப்படும் கூத்தானது

1. காமன்கூத்து 2. புலந்தி கூத்து 3. துணங்கைக்கூத்து 4. வேலன் கூத்து 5. ஆயர்கூத்து

10. “சித்திரக்காரப்புலி” என அழைக்கப்பட்ட மன்னன்

1. மகேந்திர வர்மன் 2. இராஜராஜ சோழன் 3. நந்திவர்மன் 4. நரசிம்மன் 5. ராஜேந்திர சோழன்

11. தஞ்சை பொருங்கோயில் விமானத்தை குறிப்பது

1. மந்திரம் 2. பிரம்மாந்திரக்கல் 3. கஜப்பிருஷ்டகம் 4. திகாவா 5. விஸ்வகர்ம

12. பிற்கால சோழர்கால வரையரையானது

1. கி.பி-850-985 2. கி.பி-985-1020 3. கி.பி-1070-1270 4. கி.பி-1070-1210 5. கி.பி-985-1035

13. தற்போது ‘ஜலசயனம்’ என அழைக்கப்படும் ஆலயம்

1. கைலாசநாதர் கோயில் 2. மதங்கேஸ்வரம் 3. முத்தீஸ்வரம் 4. மாமல்லபுர கோயில் 5. தஞ்சை கோயில்

14. சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம் என அழைப்பது

1. ஐராவதேஸ்வரம் 2. திரிபுவனம் 3. சிதம்பரம் 4. நந்தி கோயில் 5. மாமாங்கேஸ்வரம்

15. பெருமளவு ராஜகோபுரங்கள் வளர்ச்சி பெற்ற காலம்

1. சங்ககாலம் 2. குப்தர்காலம் 3. பல்லவர் காலம் 4. ஆரியர் காலம் 5. நாயக்கர் காலம்

16. ஒரு வளைவையுடைய வடிவங்களை கொண்ட விக்கிரகம் அழைக்கப்படுவது

1. சமபங்கம் 2. அதிபங்கம் 3. அபங்கம் 4. திரிபங்கம் 5. பங்கம்

17. "குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயில்….." என பாடியவர்

1. சம்பந்தர் 2. பெரியாள்வர் 3. மாணிக்கவாசகம் 4. திருநாவுக்கரசர் 5. அருணகிரிநாதர்

18. சிவனின் 'காளிகா தாண்டவ' நடனம் குறிப்பிடும் தொழிலானது

1. காத்தல் 2. படைத்தல் 3.அழித்தல் 4. மறைத்தல் 5. அருளல்

19. திருப்பாற்கடலில் ஆதிசேடன் என்னும் பாம்பனையில் விஷ்னு பள்ளி கொள்ளும் காட்சி

1. அனந்தசயனன் 2. சங்காரகன் 3. ஓங்காரகன் 4. மத்தளன் 5. மகாசேனன்

20. 'வாத்ய வித்யாதாரன்' என அழைக்கப்பட்ட மன்னன்

1. இராஜேந்திரன் 2. இராஜசிம்மன் 3. இராஜராஜ சோழன் 4. விக்ரம சோழன் 5. குலோத்துங்கன்

## பகுதி 11

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

1.இந்து விக்கிரக கலைவளர்ச்சியின் உன்னத நிலையை காட்டி நிற்பது நடராஜ வடிவமே இக்கூற்றை ஆராய்க.

2. பல்லவர்காலத்தில் கோயிற் கட்டடக்கலை பெற்ற வளர்ச்சியினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க

அ. அரசர்களின் பங்களிப்பு ஆ. கற்றளிக்கோயில்கள் இ. காஞ்சி கைலாச நாதர் கோயில்

3. சோழர்காலத்திலே தமிழ் நாட்டிற் கோயிற் கட்டடக்கலை வளர்ச்சி பெற்றவாற்றை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ. சோழமன்னர்கள் அமைத்த கோயில்கள்

ஆ. கட்டடக் கலையின் பிரதான வளர்ச்சி நிலைகள்

இ. கட்டட அமைப்பில் விமானத்தின் சிறப்பங்கள்

4. "இந்து நுண்களைகளுல் நடனக்கலையே உலகப்புகழ் பெற்றது" உரிய ஆதாரங்களுடன் இக்கூற்றை ஆராய்க